பககம் 8
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
கணபதி களஞ்சியம்
பல ்லி வீதி.
உரும்பிரா ய்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 18 செவ்வாய்க்கிழமை (2-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 14

## தமிழீழப் போராட்டம் விடுதலையின் வாசலை நெருங்கிவிட்டது

### புத்தாண்டுச் செய்தியில் புலிகள் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழீழ தேசியப் போராட்டம் இன்று விடுதலையின் வாசலை அண்மித்து விட்டது.

புதிய ஆண்டில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மேலும் வீரியம் பெற்று, தமிழீழ மக்களின் நிரந்தர விடுதலையையும், விமோசனத்தையும் பெற்றுவிடும் நிலையை எட்டும் என நம்புவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழீழ தேசிய இனம் துன்பத்தையும், துயரத்தையும், (8 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் ஜனாதிபதியை சந்தித்தார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பில் அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ளும் முகமாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிற்கும் இடையே கடந்த சனிக்கிழமை உயர்மட்டச் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற மேற்படி சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பு அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்துவதில் கொண்டுள்ள ஆர்வத்தையும் முன்கூட்டியே அறியும் பொருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில் நோர்வே (8-ம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதம் ஒடுக்கப்படும் வரை புதிய ஆண்டிலும் யுத்தம் தொடரும்!

### புத்தாண்டு செய்தியில் இராணுவத் தளபதி பல்லேகல

(நமது விசேட நிருபர்)

**புதிய ஆண்டில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் வெற்றிகரமாகத் தொடரப்பட்டு பயங்கரவாதத்தை ஒடுக்கி, யுத்தத்தில் வெற்றி கொள்ளும் ஆண்டாக 2001ம் ஆண்டு திகழும் என்று சிறிலங்காவின் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பி. பல்லேகல விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.**

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பி. பல்லேகல நாட்டு மக்களுக்கும் படையினருக்கும் புத்தாண்டுச் செய்தி ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளார்.

இச்செய்தியில் பயங்கரவாதத்திற்கான யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு நவீன ரக ஆயுதங்கள் எமக்குவந்த வண்ணமுள்ளது. இதனால் இப்புதிய ஆண்டில் நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாப்பதற்கு படையினர் போரிட்டு வருகின்றனர். இதனை சமாதானத்தை விரும்பும் அனேக மக்கள் விரும்புவதுடன் படையினரின் தியாக மனப்பான்மை (8ம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரன் மன்றில் ஆஜர் வாக்குமூலம் பெறப்பட்டது

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவத்தில் இருந்து தப்பி வந்த பொன்னுததுரை மகேஸ்வரன் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் தம்ப சி டியில் உ ள சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதி தி அ பிரேம் சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஈ பி டி.பி. அமைப்பைச் சேர்ந்த பருத்தித்துறை பிர (8ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை அடையாள அணிவகுப்பு நாளை

[மந்திகை]

மிருசுவில் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் அடையாள அணிவகுப்பு நாளை இடம்பெறவுள்ளது.

இந்த அடையாள அணிவகுப்பு உத்தியோகப் பற [8ம் பக்கம் பார்க்க]

## அதிவேகம் கொண்ட "ஸ்ரெல்த்" படகுகள் விடுதலைப் புலிகளிடம் உண்டு!

(கொழும்பு)

அமெரிக்காவின் ஸ்ரெல்த் குண்டு வீச்சு விமானத்தின் வடிவமைப்பைக் கொண்ட ஸ்ரெல்த்படகுகள் புலிகளிடம் உள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

19அடிநீளமானதும் இருநூறுகுதிரைவலுக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களில் இயங்கக்கூடியதுமான இப்படகுகளில்நான்கு புலிகள்வசம் உள்ளதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐம்பதுகடல்மைல் வேகத்தில் இவை செல்லக்கூடியவையென்பதுடன் இலங்கைக் கடற்படையிடமுள்ள அதிவேகத்தாககுதல் படகின் வேகமும் இதேஅளவென்பதும் குறிப்பிடத்தக்கது'

இதேவேளை இப்படகு கடந்த ஒக்டோபர் மாதம் திருமலைக்குத் தென் கிழக்காக உள்ள காட்டுப்பகுதியில் (8-ம் பக்கம் பார்க்க)

## ரணில் சிவசேனைத் தலைவர் சந்திப்பு இனப் பிரச்சினை குறித்து பேசினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்கா நேற்று சிவசேனைக் கட்சித் தலைவர் பால்தக்கரேயைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும், அது தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு பற்றியும் எடுத்துக்கூறியுள்ளார்.

இச்சந்திப்பின் போது சிவசேனைக் கட்சித்தலைவர் பால்தக்கரே ரணில் விக்கிரம சிங்காவிடம் தமிழ் மக் (8ம் பக்கம் பார்க்க)

## 2001ல் தென் ஆசியாவின் முக்கிய தலைவர் "பிரபா"

தென் ஆசியாவின் 2001ம் ஆண்டிற்கான முக்கிய தலைவர்களில் ஒருவராக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் தென்படுவதாக செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. தென் ஆசியாவின் அதி முக்கிய தலைவர்கள் வரிசையில் போட்டியிடக் கூடிய தலைவர்களில் வே.பிரபாகரன் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சு வார்த்தையில் விலகாதிருக்கும் அவரது உறுதியானது அடுத்துவரும் மாதங்களில் பேச்சு வார்த்தையினை ஆரம்பிப்பது சாத்தியமானால் நிச்சயம் பிரபாகரனே தென் ஆசியாவின் அதி முக்கியஸ்தராக ஆகிவிடுவார் என்றும் கூறப்படுகிறது. (வ)

## யுத்தத்தை தொடர்ந்து செய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல!

### பிரதி பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல விடுதலைப்புலிகள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும்விதத்தில் நடந்து கொள்ளாதவரை யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம அரசாங்கத்திற்குஉண்டு.

இவ்வாறுபிரதிப்பாதுகாப்பு அமச்சர் ஜெனரல்அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்

அவர் மேலும்தெரிவிக்கையில் விடுதலை புலிகள் போரைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மேசைககு வருவார்களானால் யுத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயமுடியும் இதன்மூலம் (8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பண்டத்தரிப்பு. காளையடி பண்ணாகத்தைச் சேர்ந்த வெற்றிவேலு – சின்னத்துரை என்பவருடைய விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிருசிகேசன் சுவையகத்திற்கு முன்பாக உள்ள பாட்டா சப்பாத்துக்கடை, பருத்தித்துறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2062)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 166720 ஏ | 174798 ஏ |
| 174798 பி | 174798 சி |
| 174798 டி | 174798 ஈ |
| 174798 எவ் | 174961 ஏ |
| 175058 ஏ | 175776 ஏ |
| 175776 பி | 175776 சி |
| 175776 டி | 175776 ஈ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 166288 ஏ | 166288 பி |
| 166306 ஏ | 166306 பி |
| 166418 ஏ | 168606 ஏ |
| 168606 பி | 168606 சி |
| 168606 டி | 168606 ஈ |
| 168701 ஏ | 168930 ஏ |
| 168930 பி | 168930 சி |
| 168930 டி | 171643 ஏ |
| 171643 பி | 171743 சி |
| 171613 டி | 171643 ஈ |
| 171674 ஏ | 171771 ஏ |
| 171771 பி | 171938 ஏ |
| 171945 ஏ | 171945 பி |
| 171945 சி | 172002 ஏ |
| 172002 பி | 172004 ஏ |
| 172004 பி | 172004 சி |
| 173575 ஏ | 173718 பி |
| 173718 சி | 173718 ஏ |
| 173751 ஏ | 173751 பி |
| 173751 சி | 173751 டி |
| 173751 ஈ | 173751 எவ் |
| 173813 ஏ | 173888 ஏ |
| 173888 பி | 175286 ஏ |
| 175311 ஏ | 175315 ஏ |
| 175321 ஏ | 175329 ஏ |
| 175329 பி | 175330 ஏ |
| 175337 ஏ | 175342 ஏ |
| 175342 பி | 175342 சி |
| 175342 டி | 175391 ஏ |
| 175418 ஏ | 175448 ஏ |
| 175448 பி | 175451 ஏ |
| 175451 பி | 175491 ஏ |
| 175491 பி | 175491 சி |
| 175491 டி | 175491 ஈ |
| 175510 ஏ | 175510 பி |
| 175510 சி | 175525 ஏ |
| 175542 ஏ | 175542 பி |
| 175543 ஏ | 175543 பி |
| 175543 சி | 175547 ஏ |
| 175547 பி | 175564 ஏ |
| 175564 பி | 175587 ஏ |
| 175588 ஏ | 175602 ஏ |
| 175602 பி | 175608 ஏ |
| 175609 ஏ | 175609 பி |
| 175619 ஏ | 175619 பி |
| 175672 ஏ | 175685 ஏ |
| 175685 பி | 175693 ஏ |
| 175699 ஏ | 175700 ஏ |
| 175700 பி | 175702 ஏ |
| 175708 ஏ | 175712 ஏ |
| 175712 பி | 175712 சி |
| 175715 டி | 175712 ஈ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 175644 ஏ | 175644 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 161141 ஏ | 163198 ஏ |
| 163198 பி | 163198 சி |
| 163198 டி | 166001 ஏ |
| 166183 ஏ | 166183 பி |
| 166183 சி | 166230 ஏ |
| 166268 ஏ | 166279 ஏ |
| 168539 ஏ | 168683 ஏ |
| 168683 பி | 168782 ஏ |
| 171969 ஏ | 172008 ஏ |
| 172026 ஏ | 172026 பி |
| 172026 சி | 172791 ஏ |
| 172791 பி | 172791 சி |
| 173630 ஏ | 173630 பி |
| 173730 ஏ | 173730 பி |
| 173846 ஏ | 175225 ஏ |
| 175225 பி | 175225 சி |
| 177225 டி | 175225 ஈ |
| 175256 ஏ | 175256 பி |
| 175256 சி | 175264 ஏ |
| 175286 பி | 175286 சி |
| 175286 டி | 175286 ஈ |
| 175286 எவ் | 175300 ஏ |
| 175398 ஏ | 175469 ஏ |
| 175469 பி | 175474 ஏ |
| 175520 ஏ | 175520 பி |
| 175524 ஏ | 175545 ஏ |
| 175545 பி | 175549 ஏ |
| 175582 ஏ | 175582 பி |
| 175640 ஏ | 175640 பி |
| 175679 ஏ | 175679 பி |
| 175692 ஏ | 168972 ஏ |
| 168972 பி | 168972 சி |
| 170166 ஏ | 170166 பி |
| 172865 ஏ | 172865 பி |
| 172865 சி | 172865 டி |
| 175963 ஏ | 175963 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 174757 ஏ | 174823 ஏ |
| 174825 ஏ | 174939 ஏ |
| 174939 பி | 174939 சி |
| 174964 ஏ | 174987 ஏ |
| 175765 ஏ | 175767 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 173051 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 173028 ஏ | 173028 பி |
| 173028 சி | 175870 ஏ |

(ச)

டிசம்பர் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி (7ம் பக்கம் பார்க்க)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது மக்களின் பாதிப்பை உணர்ந்து அவர்களுக்கு கடற்றொழில் பாதிப்பு நிவாரண உதவியைப் பெற்றுத் தர உதவிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் விவகார அமைச்சருமான கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தாவையும், ஏனைய ஈ. பி. டி. பி. பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

எதிர் காலத்தில் எமது மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு மேலும் உதவுவார்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

**பணிப்பாளர் சபை,**
**பாஷையூர் கடற்றொழிலாளர்,**
**கூட்டுறவுச் சங்கம்.**

(கி/922)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி இரத்தினம் சுந்தரம்

நாவற்காடு அச்சுவேலியைச் சேர்ந்த இரத்தினம் சுந்தரம் 31. 12. 2000 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

தகவல் : **த. நவநீதன்** (பேரன்)

### திருமதி மல்லிகாதேவி சுப்பிரமணியம்

சாவகச்சேரியைச் சேர்ந்த மல்லிகாதேவி சுப்பிரமணியம் 31. 12 2000 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

தகவல் : **நா. கனகசபை**

### திருமதி தங்கமுத்து மாணிக்கவாசகர்

சொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமுத்து மாணிக்கவாசகர் 29. 12. 2000 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று 10 மணிக்கு நடைபெறும.

தகவல் :
**திருமதி மணிமேகலை சிவலிங்கம்**
(மகள்)

# தொழிற் பயிற்சிகள்

### றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்

சகல இன றேடியோக்கள், ரெலிவிசன்கள் வீடியோ டெக், கணனிகள் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து ஒரு வருட முழு நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்

காலம்: 10 மாதம்

### றீவைண்டிங்

ரான்ஸ்போமர், மின்விசிறி, மின்மோட்டர்கள் வீட்டு மின்சார வேலைகள் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

### ஏயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனப் பெட்டிகள், காற்று சீராக்கல் பதனிடல் என்பன திருத்தும் முறை மற்றும் பொருத்தப்படும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

### மோட்டசைக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டசைக்கிள் திருத்தப்படும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்
05-01-2001 (கிழமை நாட்கள்)
06-01-2001 (சனி, ஞாயிறு)
விபரங்கள் நேரில்

குறிப்பு: எமது நிறுவனத்தில் தொழில் பயிற்சியை முடித்த சகல மாணவர்களுக்குமான இறுதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் மாணவர்கள 10-01-2001 க்கு முன் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

**Jaffna Technical Institute**

T. P. 3335

52/1, ஸ்ரான்லி றோட் (றெயில்வே கடவை அருகாமை மேல் மாடி) யாழ்ப்பாணம்.

(2066)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி உப அலுவலகங்கள்

### 2001ம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம் பெறுவதற்கான அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் நிலையங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை எமது சபையின் உப அலுவலகங்களில் பெற்று 15-01-2001ம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து அவ்வவ் உப அலுவலகங்களில் ஒப்படைக்குமாறும், மேலும் 2001ம் ஆண்டு பங்குனி 31ம் திகதிக்கு முன் உரிமைக் கட்டணத்தைச் செலுத்தி உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும். கேட்டுக் கொள்கின்றேன் 31-03-2001ற்கு பின்னர் அனுமதிப்பத்திரமின்றி எந்த வர்த்தக நிலையங்களும் இயங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன.

ஒப்பம்: **வ. நடராசா ஜே. பி**
தலைவர்,
பிரதேச சபை, கரவெட்டி.

**சி. பசுபதி**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை, கரவெட்டி.

(கி/921)

## விடுதலைப் புலிகளின்
# யுத்த நிறுத்த அழைப்பை உதாசீனப்படுத்தலாகாது
# பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் அவசியம்
## தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜம்மு-காஷ்மீர் பகுதியில் முஸ்லிம்களின்பெருநாளான ரம்ழானை முன்னிட்டு இந்திய அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடித்து அதனை நீடிப்பது போல இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அழைப்பை அலட்சியம் செய்யாது பேச்சுவார்த்தைக்கான சுமுக நிலையை தோற்றுவிப்பது அவசியமானதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்ஆர்.சம்பந்தன் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பெரும்பாலானோரின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக நோர்வே மத்தியஸ்தத்தின் உதவியுடன் தொடரும் போரைமுடிவிற்கு கொண்டு வரும்வகையில் சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

யாழ்ப்பாண பகுதியில் நவீன ரக ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டு வருவது அவர்களுடைய சொத்துக்களையும் உடமைகளையும்மேலும் சேதமாக்கவேவழியேற்படும். இப்படியான நடவடிக்கைகள்தொடருவதானதுஇந்திய நாட்டில் உள்ள மனிதாபிமானமுள்ள எந்த ஒரு பிரஜையையும் திருப்திப் படுத்துவதாக அமையமாட்டாது.

இந்த நடவடிக்கையானது தொடராமல் உடன் நிறுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

தொடரும் யுத்தத்தினால் ஒவ்வொரு தமிழ் பிரஜையும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கபடுகின்றான் என்பதே உண்மை நிலையாகும்.

இராணுவ ரீதியான வெற்றிகள் நிரந்தரமான அமைதியை ஒரு போதும் கொண்டு வரப் போவதில்லை மாறாக பெறுமதி மிக்க சொத்திழப்பிற்கும் விரக்தி நிலைக்குமே வழிகோலும்.

இது விடயத்தில் அரசாங்கம் மட்டுமல்ல முக்கியஎதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும ஏனைய தமிழ்க் கட்சிகளும் புரிந்துணர்வுடன் சர்வதேச நல்லெண்ணத்தை நிலை நாட்டும் வகையில் செயற்படவேண்டியது அவசியமாகிறது.

இது விடயத்தில் அரசும் விடுதலைப்புலிகளும் நோர்வே மத்தியஸ்தத்தை சரிவரப் பயன்படுத்தி நிலையான சமாதானத்தை ஏற்படுத்த ஆக்கபூர்வமாகசெயற்பட வேண்டுமென்பதே தமிழர் விடுதலைக்கூட்டணியின் அவாவாகும்

இம்முயற்சியில் இந்தியாவின் ஆலோசனையின் அடிப்படையில் சமாதான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகும்.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக இலங்கை சுதந்திரத்தின் தாற்பரியத்தை அனுபவிக்கும் எத்தனங்கள் தோற்றுவிட்டனஎன்பதேவரலாறுகாட்டும் பாடமாகும்.

உலகில்நடைபெறும் சம்பவங்கள் நமக்கு ஒருபடிப்பினையாக எடுத்துசமாதானமுயற்சியில் முன்னேற வேண்டும்என்பதேசகலரின் வேணவா ஆகும் (க)

## பல்வேறுகளவுகளில்,
# தொடர்புடைய திருட்டுக்கும்பல் விரைவில் கைதாகலாம்?

(இணுவில்)

திருட்டுத்தொழிலில் ஈடுபட்ட இளைஞர் கையும்மெய்யுமாகப் பிடிபட்டதையடுத்து பல்வேறு திருட்டுக்களில் ஈடுபட்ட திருட்டுக்கும்பல் ஒன்று கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்திற்கண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை திருடியமை தொடர்பாக17 வயது இளைஞர் ஒருவர் கையும் மெய்யுமாகத் துரத்திப்பிடிக்கப்பட்டார்.

மேற்படி இளைஞர், தனது வாக்கு மூலத்தில்பெரியதோர் திருட்டுக்கும்பலில் இணைந்துதான் செயற்படுவதாகவும், திருடிச் செல்லும் பொருட்களிற்குப் பதிலாக சிறு தொகைப் பணம் தனக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம்,மேற்படிதிருட்டுச் செயலுடன் தொடர்புபட்ட 17 வயது இளைஞர் முன்பும் பல்வேறு இடங்களில் திருடியமை காரணமாக பொலிஸ் காவலில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

இளைஞனின் வாக்கு மூலத்தையடுத்துதிருட்டுக்கும்பலை தேடிக்கண்டு பிடிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-49)

## வீதி ஓரத்தில் 'வாகனங்கள்
# கஸ்தூரியார் வீதியில் போக்குவரத்து பாதிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில், விதிகளுக்கு முரணான வகையில்வாகனங்களை நிறுத்தி வைப்பதனால் அவ்வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

யாழ். சஸ்தூரியார் வீதி, ஒருவழிப் போக்குவரத்திற்கென ஒதுக்கப்பட்டதுடன், இவ் வீதியின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு யாழ்ப்பாண மாநகர சபை தடை விதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி வீதியோரமாக வாகனங்களை நிறுத்தும் செயற்பாடானது, பல வேளைகளில், வீதி விபத்துக்களுக்கு வித்திட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. [உ-59]

# பாடநூல் விநியோகம் விரைவில் இடம்பெறும்
## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இவ் ஆண்டில் இலவச பாடநூல்கள் விநியோகம் செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்எஸ். என். தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம்ஒன்று கடந்த மாதம் 26 ம் திகதி இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அவை செயற்பட்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே அனுப்பப்பட்ட இலவச பாடநூல்கள் பொதிகளில் குறிப்பிட்ட குறியீடுகளுக்கு அமைய விநியோகிக்கப்பட்டன. மேலும் வரவுள்ள 1500 பொதிகளும் விரைவில் விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலவச பாடநூல்கள் வழங்குவதற்கு ஒவ்வொரு வலயமும் தமது தேவைப் பட்டியலை வகுப்புரீதியாக 5/1/4/200ம் இலக்க படிவத்தில் தயாரித்து வழங்கப்பட வேண்டிய புத்தகங்கள் பற்றிய விபரத்தை மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டிற்கான சீருடைகள் தேவைப்பட்டியலை இம்மாதம் 15ம் திகதிக்கு முன் மாணவர் தொகை மற்றும் விபரங்களுடன் சம்பந்தப்பட்ட பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சந்தை செல்வோர் சிரமம்

(மல்லாகம்)

சுன்னாகம் சந்தையைஅண்டிய வீதிப்பகுதியில், வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதால், அதனூடாகப்போக்குவரத்துச் செய்வோர் பெருந்துன்பமுறுவதாக தெரிய வந்துள்ளது.

மேற்படி சந்தைக்கு வருபவர்களேஇவ்வாறுமனச்சாட்சியற்ற வகையில் வீதிக்கருகாக வாகனங்களை நிறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (உ- ப-14

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

(மல்லாகம்)

உரும்பிராய் கிராம சேவகர் பிரிவுகளில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது. (உ-ப-14)

## ஆசிரியர்க்கு இடர்கால கொடுப்பனவு

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட புயலினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, ஒருங்கே 3மாதசம்பளத்தை இடர்காலக் கொடுப்பனவாக வழங்க, நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சை ஆங்கில ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக ஆங்கில ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்தவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கடிதத்தில் முன்னாள் கல்வி அமைச்சர் ராஜபக்ஸ காலத்தில், புயல் சேதம் ஏற்பட்ட போது ஆசிரியர்களுக்கு இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட்டதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் சனசமூக நிலைய கட்டிடம்புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் ஒதுக்கிய நிதியிலிருந்து மேற்படி புனரமைப்பு பணிகள் நிறை வேற்றப்பட்டுள்ளதையடுத்து மேற்படி சனசமூக நிலைய தலைவர் அ. பரம்சோதியும் நிர்வாக சபையினரும் தமது நன்றிகளை பிரதேச சபை தலைவருக்கு தெரிவித்துள்ளனர். (க)

## திருப்பணி நிதி சேகரிப்பு

(மல்லாகம்)

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார்கோயில் திருப்பணி நிகழ்வை மேற்கொள்வதற்கு வசதியாக அக்கோயிலின்திருப்பணிச்சபையினர் கிராமமக்களிடம் நிதி சேகரித்து வருகின்றனர். [உ-ப 14]

## வருடாந்த கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரியின் பழையமாணவர் சங்கவருடாந்த ஒன்றுகூடல் வைபவம் இன்று பி.ப4மணிக்கு கல்லூரியின் பிரதானமண்டபத்தில் வ.அஞ்சலோ அவர்களின் தலைமையில்இடம்பெறவுள்ளது. இக்கல்லூரியின்பழையமாணவரும்முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான என்.மதனராஜா மற்றும் ஊர் ஊர்காவற்றுறை உதவிஅரசாங்கஅதிபர் கே,எக்ஸ்.செல்வநாயகம்ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொள்வர். [க.75[

## ஆன்மீக நிகழ்வுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் – பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இம் மாதம் பல ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன

3 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 7 தினங்களுக்கு பாகவத படனம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 7 ஆம் திகதி தியானப் பயிற்சியும் 9 ஆம் திகதி பூரணை தின நிகழ்வுகளும், 14 ஆம் திகதி பொங்கல் விழாவும் 19 ஆம் திகதி விசேட மகளிர் பஜனையும் இடம்பெறவுள்ளது. [உ]

## கைதானவர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரால் கைது செய்யபப்பட்ட ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரி வீதி மானிப்பாயைச் சேர்ந்த அன்ரன் அருளரூபன் கடந்த வருடம் டிசம்பர் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 31 ஆம் திகதி பெற்றோர் முன்னிலையில் மாலை 3 மணியளவில்விடுவிக்கப்பட்டார்.

பிரஸ்தாப நபரை மோட்டார் சைக்கிள் படைப்பிரிவினர் கைது செய்திருந்தனர். [க-12 ]

## ஒளிவிழா

[சங்கானை]

சித்தன்கேணி "பாரதி" கல்வி நிலையமணவர்களால் அண்மையில் "ஒளிவிழா" மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

சமூக விழிப்புணர்வை ஊட்டும் வகையிலான நாடகங்களும் இவ் விழாவில் மாணவர்களால் மேடையேற்றப்பட்டன. (உ-ப-18)

## காலிமுகத்திடல் தற்காலிகமாக மூடப்படும்

(கொழும்பு)

காலிமுகத்திடலில் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளதால், இம் மாதம் முதல் சித்திரை இறுதிப்பகுதி வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

இத்திடலிலுள்ள வசதிகளை அதிகரித்து நவீன வசதிகள் அடங்கிய திடலாக மாற்றும் வகையிலானபுனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட விருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-59)

## தீவக கல்விவலய ஒளிவிழா

(சுண்டுக்குளி)

தீவக கல்விவலய கிறிஸ்மஸ் ஒளிவிழா கடந்த 29 ஆம் திகதி கல்வித்திணைக்கள புதிய கட்டடத்தில் கிறிஸ்தவ சமய கலாசார குழுவினரின் ஏற்பாட்டின் பேரில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ ஸ்ரனிஸ்லஸ் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறை பங்குத்தந்தை வண பிதா யேசுதாஸ் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக நாரத்தனை உதவிப் பங்குத்தந்தை வண பிதா றெமிசனும் கௌரவ விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர். ( -110)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ் மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொழிற்சங்க புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் யாழ் மட்டப் படிப்புகளா கல்லூரியில் இடம் பெற்றது

தலைவராக எஸ் தெய்வேந்திரம், செயலாளராக கே. கிளின்டன், பொருளாளராக எஸ் சௌந்தரராஜன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். [உ]

# செய்தித் துளிகள்

## சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பு

(சுன்னாகம்)

சுதந்திரன் பத்திரிகையில் மூன்று தசாப்தங்களில் வெளிவந்துள்ள சிறுகதைகளில் சிறப்பான 108 சிறுகதைகளை தொகுத்து வெளியிடும் பணியில் யாழ். இலக்கிய வட்டம் ஈடுபட்டு வருகிறது.

இத் தொகுப்பு நூலின் தொகுப்பாசிரியராக எழுத்தாளர் செங்கை ஆழியான் பணியாற்றி வருகிறார்.

கருத்து முரண்பாடுகள், பிரதேச வேறுபாடுகள் எதுவுமின்றி இலங்கையின் அனைத்து எழுத்தாளர்களினதும் சிறுகதைகள் சுதந்திரனில் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-25)

## அங்கத்தவர் தெரிவு

(மல்லாகம்)

கோண்டாவில் சத்தியசாயி நிலையத்தில் அண்மையில் புதிய அங்கத்தவர் தெரிவு இடம் பெற்றது.

இதில், தலைவராக ரி. விக்னேஸ்வரன், உபதலைவராக பத்மநாதன், செயலாளராக தங்கராசா, இளைஞர் பிரிவு தலைவராக எஸ். லிங்கேஸ்வரன், இளைஞர் பிரிவு செயலாளராக சபேசன் ஆகியோர் தெரிவாகினர்,

(உ-ப-14)

## ஆன்மீக வகுப்பு

(மல்லாகம்)

கோண்டாவில் சத்தியசாயி நிலைய ஏற்பாட்டில், கோண்டாவில் கிழக்கு நாராயணர் கோயிலடியில் இளம் சிறார்களுக்கு ஆன்மீக வகுப்புகள் நடத்தப் டுகிறது.

ஆர்வமுள்ளவர்கள் இவ் வகுப்புக்களில் கலந்து கொண்டு பயன்பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-ப-14)

## மகாயாகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தி ஞானவைரவர் ஆலயத்தில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நாட்டின் சமாதானத்திற்கென நேற்று மகாயாகம் மொன்று நடைபெற்றது.

(ந-04)

## முந்திரிகைச் செய்கை

(மல்லாகம்)

உரும்பிராய் பகுதிவிவசாயிகள், முந்திரிகைச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருவதனை அவதானிக்க முடிகிறது. (உ-ப-14)

## மிதிவெடி அபாயம்

(கல்வயல்)

கலட்டி அம்மன் கோவிலுக்கு அண்மையில் படையினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதியில், மிதிவெடி அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது மாலைநேரங்களில் விறகு வெட்டுவோர் தொகை அதிகரித்துக்காணப்படுகிறது.

(உ-111)

## பிரதேச செயலகம் இடமாற்றம்

(கல்வயல்)

இடப்பெயர்வு காரணமாக பருத்தித்துறை சாரையடியில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் தற்பொழுது யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் முன்னைய ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு அருகாமையில் இயங்கி வருகிறது.

(உ113)

## முதலுதவி பயிற்சி'

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால், தெரிந்தெடுக்கப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச்சங்கஉள்ளூர்தொண்டர்கள் 20 பேருக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. (உ)

## பாம்புதீண்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

பாம்புதீண்டியகுடும்பஸ்தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்துள்ளார்.

மானிப்பாய் டச்சு றோட்டை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலன் விஜயரட்ணம் (வயது 49) என்பவரே தனது வீட்டை துப்பரவு செய்து கொண்டிருந்த சமயம் பாம்புக் கடிக்கு இலக்காகி மரணமானவராவார் ந-5)

## நவீன சந்தை திருத்தம்

(யாழ்ப்பாணம்)

போர் நடவடிக்கைகளால் சேதமுற்றுக் காணப்பட்ட யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேல்மாடிக்கட்டடங்கள் யாழ். மாநகர சபையினரால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. [உ-111]

## வேவு விமானம் நோட்டம்

(ஈச்சமோட்டை)

அரியாலை கரையோரப் பகுதி, பூநகரி, கல்முனைஆகிய பகுதிகளை உள்ளிட்ட, யாழ். குடாநாட்டின் தென்கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வேவு விமானம் ஒன்று நோட்டமிட்டது.

காலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை இந் நடவடிக்கை இடம் பெற்றதாக அப்பகுதி மக்கள்தெரிவித்துள்ளனர். (க-59)

## கவனிப்பாரற்ற கலட்டி வீதி

(கல்வயல்)

யாழ்ப்பணம் கலட்டி அம்மன் வீதி நீண்டகாலங்களாக திருத்தம் செய்யப்படாது மக்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுகிறது.

மேற்படி அம்மன் ஆலயத்திற்கு இறை தரிசனத்திற்காக இவ் வீதியால் நடந்து செல்வோர், குத்திட்டு நிற்கும் கூரிய கற்களின் உறுத்தலுக்கு ஆளாகி வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-111)

## பஸ்தரிப்பிடம் விஸ்தரிப்பு

(கல்வயல்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மேற்படி மாநகர சபையினால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

ஒரு சிலமாதங்களுக்குமுன், சீமெந்தினால் கட்டப்பட்டு தகரக் கூரையிடப்பட்ட இத் தரிப்பு நிலையங்களுடன் இணைத்தும் மேலும் அதே யளவு க்கட்டிடம் அமைக்கப்பட்டு வருகிறது (உ-111)

## காவல் குழுக்கள்

(மந்துவில்)

வல்லிபுரக் கோவிலுக்கு அண்மையில் உள்ள காட்டு வயல் வெளியில், கட்டாக் காலிமாடுகளினால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க, படையினரின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட விவசாயிகளினால் காவல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் இரவு நேரத்திலும் வயலில் காவல்கடமையில் ஈடுபட்டு, தமது நெற் பயிர்களை கட்டாக்காலி மாடுகளிலிருந்து காத்து வருகின்றனர். (உ-39)

# ஆசிரியர்கள் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் சுசிலுடன் ஆராய்வு

## பலபிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் ஆசிரியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது முன்வைக்கப்பட்ட கருத்துக்களாவன;

வடக்கு- கிழக்கில் நடைபெறும் யுத்தம் காரணமாக ஆசிரியர்களின் சுய விபரக் கோவைகள், அழிந்தும், தொலைந்தும் போயுள்ளமையால் அவர்களின் ஒய்வூதியங்கள், பதவி உயர்வுகள்தாமதப்படுவதாகவும் இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்று உடன் அமுல்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

மேலும், தீவகப்பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம், குறித்தும் ஆராயப்பட்டதுடன், கல்வி அமைச்சிலும், தேசிய கல்வி நிறுவகத்திலும் தமிழ்மொழி மூலம் கடமையாற்றக் கூடியவர்களின் நியமனங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

வருட இறுதிப் பரீட்சையின் போது மாணவர்களிடம்பரீட்சைக் கட்டணம் அறவிடும் முறை இரத்துச் செய்யப்பட்டதுடன் மேல் மாகாணத்தில் வினாத்தாள்கள் சலுகைஅடிப்படையில் வழங்கப்படுவது போல ஏனைய பகுதியிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

(க)

# இராசி பலன்

02/01/2001

(மார்கழி 18, செவ்வாய்)

சப்தமி மு ப 11.29 வரை உத்தரட்டாதி மு இ 8.23 வரை

ராகுகாலம் 3.30- 5.00

சுபநேரம் 12.30- 2.00

அமிர்த சித்தம்.

**மேடம்**
பணவிரயம், பிதாசிந்தை, பிரயாணம், காரியதாமதம்.

**இடபம்**
மனமகிழ்ச்சி, கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு, காரிய நிறைவு;

**மிதுனம்**
தொழில் மேன்மை, அதிகாரம், முயற்சி வெற்றி, பெரியோர் சந்திப்பு.

**கடகம்**
பிரயாணம், தந்தை வழி உறவு, மனப்பயம், சட்டுப்பாடு.

**சிங்கம்**
உறவினர் வெறுப்பு, வியாதி, பிரயாண பயம், முயற்சி தடங்கல்.

**கன்னி**
போசன சுகம், பிரயாணம், தனவரவு, சுவாரஸ்யம்.

**துலாம்**
நிலைக்கேடு, காரிய நன்மை, சந்தோசமான சம்பவம், நோய்குணமடைதல்.

**விருச்சிகம்**
மனக்கவலை. தாழ்வு நிலை, காரிய தாமதம், மனஸ்தாபம்.

**தனுசு**
கல்விச் சிறப்பு, பயந்த சுபாவம். முயற்சி தடங்கல், தாய்வழி உறவு.

**மகரம்**
பிரயாணம், தனவரவு, வாக்கு மேன்மை, காரியம் கைகூடும்.

**கும்பம்**
வாக்கு கலகம், சுபசெலவு, காரிய தாமதம், விவாதம்.

**மீனம்**
ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், போசன சுகம், காரியம் கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்

## மிருசுவில்படுகொலைக்கு அமைப்புக்கள் கண்டனம்

(தென்மராட்சி)

மிருசுவிலில் இடம்பெற்ற படுகொலையை யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாக கண்டிப்பதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் செயலாளர் அ. க. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 20 க்கு மேற்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றி யாழ். பல்கலைக்கழகச் சமூகம் மேற்கொள்ளவுள்ள தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கான போராட்டம் தொடர்பாக விபரமாக எடுத்துக் கூறப்பட்டது. (ச-77)

## குப்பிளான் பகுதியில் அபிவிருத்தி இல்லையாம்

(இணுவில்)

குப்பிளான் பகுதியில் அபிவிருத்திப் பணிகள் எவையும் கடந்தபல வருடங்களாகமுன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிக்கான மின்சாரம் வழங்குவதற்கென மின் கம்பங்கள் நாட்டப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

அத்துடன், வீதிதிருத்தம், ஆலய புனருத்தாரணம். பாடசாலைகள் அபிவிருத்தி எதுவும் இப்பகுதியில் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஏனைய இடங்களில், பல்வேறு அமைப்புகளும் நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும், பாராமுகமாக நடந்து கொள்ளும் அதிகாரிகளுக்கு நாமும் இம் மண்ணின் மைந்தர்கள் தான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம் என இம்மண்வாசி ஒருவர் இதுகுறித்து கவலையுடன் குறிப்பிட்டார்.

(உ-49)

## திருமலையில் ஆர்ப்பாட்டம் பொலிஸார் தாக்குதல்

(திருகோணமலை)

திருமலையில் வெள்ள நிவாரணக் கொடுப்பனவை இருவாரத்தில் இருந்து ஒருவாரமாகக் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று பெரும்பான்மை இன மக்களால் நேற்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்பாட்ட ஊர்வலத்தின் போது சூறாவளியினால் வீழ்ந்து கிடந்த மரங்கள் வீதிகளின் குறுக்கே போடப்பட்டன. இதனையடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருவார கால உலர் உணவு வழங்கப்படும் என்று அரசு ஏற்கனவே அறிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## திருட்டு முயற்சியிலும் ஓர் தயாள சிந்தை மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவு வேளையில் வீட்டில் திருடிச் சென்றவர்கள் அங்கு நின்ற பழைய துவிச்சக்கர வண்டியில் 50 ரூபா பணத்தை வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். நகைப்பையும், கோபத்தையும் ஒருங்கே தருகின்ற சம்பவம் ஒன்று மாதகல் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது; வீட்டில்உள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை உட்புகுந்த திருடர் கூட்டம், அங்கிருந்த பணம் நகை என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றதுடன், அங்கு நின்ற பழைய துவிச்சக்கர வண்டியில் 50ரூபா பணத்தினை வைத்துச் சென்றுள்ளனர்.

எடுத்துச் சென்ற பொருட்களின் பெறுமதியா அல்லது பழைய துவிச்சக்கர வண்டியை திருத்துவதற்காக வைக்கப்பட்டதாவென மேற்படி பணம் குறித்து அயலவர்கள் நகைச்சுவையுடன் பேசியதையும் அவதானிக்க முடிந்தது

எது எப்படி இருப்பினும், கள்வர் மனதில் ஏற்பட்ட இவ் ஈர மனம் திருந்தி வாழ்தலுக்கு வழி வகுக்க வேண்டும் எனவும் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர். (உ-12)

## நூல்நிலையம் செல்வோர் ஏமாற்றம்

(மல்லாகம்)

உடுவில் பிரதேச சபைக்குட்பட்ட நூல் நிலையங்களில், மக்கள் பாவனைக்கான சஞ்சிகைகள்- பத்திரிகைகள் என்பன மிகக்குறைந்தளவில் காணப்படுவதாக வாசகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக வாசிப்பு ஆர்வம் கொண்டபலர் மேற்படி நூல் நிலையங்களுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலைமை காணப்படுகிறது. [உ-ப-14]

# இன்று ஒரு தகவல்

## அறிவினால் ஆபத்தும் உண்டு

ஐக்கிய நாடுகள் சபையில் ஆயுதத்தடை நிலையம்ஒன்று இருக்கிறது. அங்கேயிருந்த டாச்டர் பைசண்ட்படேல் என்கிறவர், 'ஒரு போர் விமானம் தயார் பண்ணுவதற்கு ஐம்பது கோடி டாலர் செலவாகிறது. இந்தப் பணத்தை உலக நல்வாழ்வு ஸ்தாபனத்திடம் கொடுத்தால், இந்த உலகத்திலே மலேரியா – தொழுநோய்- சருமநோய் ஆகியவற்றையெல்லாம் இல்லாமல் செய்து விடலாம்' என்று சொன்னார்.

கேட்கிறதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆயினும் கொடுக்கிறதற்கு மனம் வரவேண்டுமே! அந்த மனம் எப்போது வரும்? தன்னலத்தை முற்றாகத் தியாகம் செய்தால் தான் வரும்பெரியவர்கள் எல்லோரும், 'தன்னலத்தை முழுவதுமாகத் தியாகம் செய்வதுதான் சனாதன தர்மத்தின்இலட்சியம்' என்று சொல்லுகிறார்கள். சொத்து சுதந்திரங்களை நாமே வைதது கொண்டு அனுபவிக்கிறதில் கிடைக்கிற சுகம், தற்காலிகமானது [இந்த உடைமைகளை நாம் வைத்துக் கொண்டு அனுபவிக்கிறதை விட, கொடுத்து அனுபவித்தால் அதுவே பரம ஆனந்தத்தைக் கொடுக்கிறது. சாசுவதமான சௌகரியத்திற்கும் வழி கோலுகிறது. என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

கொடுக்கிறதென்பது உண்மையிலேயே மிகவும் பெரிய விஷயம். இருந்தாலும் கொடுத்து விட்டு, கொடுத்தேன், கொடுத்தேன் என்று சொல்லிப் படம் பிடிக்கிறது. பத்திரிகையில் போட்டுக் கொள்கிறது என்பது தான் இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. கொடுத்து விட்டுக் 'கொடுத்தேன்' என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக் கொண்டு இருந்தால், அந்த அகங்காரம் தியாகத்தாலும், தானத்தாலும் கிடைக்கிற ஆத்ம அபிவிருத்தியை அப்படியே ஏப்பம் விட்டு விடும்.

தியாகம் செய்ய வேண்டும். அதை விட முக்கியமாக 'தியாகம் செய்தேன்' என்கின்ற எண்ணத்தையும் தியாகம் செய்து விடவேண்டும்என்பது பெரியவர்களின் கருத்து பரவாயில்லை! தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாலும், உடைத்ததற்கு பலன் கிடைக்குமா என்றேன் உடனடியாகப் பலன் கிடைத்து விட்டதே! என்றார். நான் அறிவாளியாக ஆகிவிட்டேன் அப்படியானால் உங்களிடம் முக்கியமான ஒரு வேண்டுகோள் எது தெரியுமா? வீட்டுக்குள்ளேயே வெடிகுண்டு தயார் பண்ணலாமா? என்று யோசிக்க ஆரம்பித்து விடாதீர்கள்! இப்போது உலகத்தில் நிறையப் பேருக்கு அறிவு நிறையவே இருக்கிறது. அந்த அறிவைப் பயன்படுத்தி, மிக நவீனமான வெடிகுண்டுகள் போன்றவற்றைத் தயார் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் இப்படி வெடிகுண்டுகள் தயார் பண்ணுவதற்குத் தேவைப்படுகிற பணத்தை 'யுனெஸ்கோ நிறுவனத்துக்குக் கொடுத்தால் உலகத்தில் எல்லோருக்கும் கல்வி அறிவை உண்டாக்கி விடலாம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

**தென்கச்சிகோ. சுவாமிநாதன்**

# தென்மராட்சி மக்கள், மீளக்குடியமருமிடத்து உடனடியாக ரூபா 10 ஆயிரம் வழங்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸிடம் வேண்டுகோள்

[தென்மராட்சி]

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள வீடுகளுக்கு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படும் போது அவர்களின் உடனடியான மற்றும் அத்தியாவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்யவும், வீடுகளில் காணப்படக்கூடிய சிறு சேதங்களைத் திருத்தவும் வசதியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என தென்மராட்சி இடம் பெயர்ந்தோர் நலன் புரி அமைப்பு வடக்கில் புனரமைப்பு புனர்வழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் அமைப்பின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் தலைவர் த.சபாநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வரும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

★ தென்மராட்சியில் மீளக் குடியமர்வதற்கு முன்னதாக அங்கு செய்யப்பட வேண்டிய அடிப்படை வேலைகள் பற்றி இங்கு திட்டமிடுவது

★ தென்மராட்சியில் மீளக் குடியமர்கின்ற குடும்பங்கள் தமது நஷ்டஈட்டுக்கு விண்ணப்பிக்கும் போது பொலிஸ் முறைப்பாடுகள் கோருவது தவிர்க்கப்படல் வேண்டும்.

★ இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் அம் மக்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படல் வேண்டும்.

★ தென்மராட்சியின் சில இடங்களில் இருக்கும விஷமிகளால் திருடிக் கொண்டு வரப்படும் கூரைத் தகடுகள், மற்றும் தளபாடங்களை வாங்குவதைத் தவிர்க்கும் படிபொது மக்களைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

(உ-77)

## நியமனங்கள் மீள் பரிசீலனை

(கல்வயல்)

சமாதான நீதவான் நியமனத்திலுள்ள குறைபாடுகளை நீக்கவும் சமாதான நீதவான்கள்மூலம் பொது மக்களுக்கு அதி உன்னத சேவைவழங்கும் வகையிலும் இந் நியமன முறையை நீதியமைச்சர் மீள் பரிசீலனை செய்யவுள்ளார்.

இந்தவகையில், நாடு முழுவதிலுமுள்ள சமாதான நீதிவான்களின் அலுவலக முறையானஇடாப்புஒன்றைத் தயாரிக்க நீதியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கு வசதியாக சமாதான நீதிவான்கள் அனைவரும் விதந்துரைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயார்செய்து பூர்த்யாக்கி இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

(உ-111)

## பாலர் பாடசாலை சிறார்களுக்கு பசுப்பால் நல். பிர. சபை முன்மாதிரி

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி பகுதியில் இயங்கும் பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் குழந்தைகளிற்கு பசுப்பால் வழங்கும் திட்டம் விரைவில்முன்னெடுக்கப்படவுள்ளதாக நல்லூர்பிரதேசசபைதலைவர்க மணிவல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

அப்பகுதி குழந்தைகளின் போஷாக்கின்மை குறித்து சம்பந்தப்பட்டோரால் பிரதேச சபை தலைவருக்கு எடுத்துக் கூறப்பட்டதையடுத்தே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது குறிப்பித்தக்கது. [க-03]

## ஒளிவிழா நிகழ்வு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பங்கு புனித மரியாள் ஆலய ஒளி விழாநிகழ்வு கடந்த 28 ஆம் திகதி 4.00 மணிக்கு உதவிப் பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய யூட்நிக்சன் தலைமையில் இடம் பெற்றது.

ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை வண பிதா ஜே ஏ. ஜேசுதாசன், அருட்சகோதரி செபமாலை தயாநாயகி ஆகியோர் கலந்து கொண்டுஒளி விழா வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து மறைக்கல்விப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன்,

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-75)

## நிரந்தர நியமனம் பெற்ற அபி. ஒருங்கிணைப்பாளர்

(ஊர்காவற்றுறை)

யாழ் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றவர்களது விபரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

ம. றோய்டீன்ராஜன் நெடுந்தீவு,
செல்வி த. குலரஞ்சினி வேலணை,
செ. அன்டர்சன் ஊர்காவற்றுறை,
செல்வி க. சுமதி யாழ்ப்பாணம்,
திருமதி. த. கௌசலை நல்லூர்,
செல்வி த. உமாரதி கோப்பாய்,
திருமதி ந. மாலினி தெல்லிப்பழை,
திருமதி. ர. சிவராணி உடுவில்,
செல்வி அ. பொன்மதி சண்டிலிப்பாய்,
திருமதி. ர. பானுமதி சங்கானை,
வி. சொக்கநாதன் சாவகச்சேரி,
ந. இராஜேஸ்வரன் கரவெட்டி,
அ. மைக்கல் ராஜ்குமார் பருத்தித்துறை.
செல்வி சு. ஜானகி மருதங்கேணி,

இவர்களுக்கான கடமைப் பட்டியல் விரைவில் வழங்கப் படவுள்ளன. (ச-75)

## கடலுள் மூழ்கும் வடமராட்சிப் பகுதி

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கின் பாகங்கள் பல கடலுள் அள்ளுண்டு செல்லும் அபாயம் நெருங்கி வருவதாக சம்பந்தப்பட்ட பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் அகழப்படும் மணல்மண்ணின் அளவு தற்போது அதிகரித்து வருவதையடுத்தே இவ் அச்சக்குரல் எழுந்துள்ளது.

வடமராட்சி மற்றும் வலிகாமப் பகுதி மக்கள் இப்பகுதியிலேயே தமக்கு தேவையான மண்ணைப் பெற்று வருவதுடன், மணல் வியாபாரம் புரிபவர்களுக்கு இவ்விடங்களிலேயே மண் அகழ்ந்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச சபையினர் விரிந்த பார்வையுடன் செயற்பட்டு பெரும் அழிவில் இருந்து தம்மை 'வருமுன் காக்க வேண்டும்' என பாதிக்கப்படும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(உ-42)

## தீவகத்தில் பிரதேச வழிபாட்டுத்தல அபி. ஒன்றியம் உதயம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் ஆலய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தீவக வடக்கு பிரதேச வழிபாட்டுத்தல அபிவிருத்தி ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் ஏற்பாட்டின் கீழ், மதபேத மின்றி அமைக்கப்பட்ட மேற்படி நிலையத்தின் தலைவராக ஊர்காவற்றுறை உதவிப் பங்குத்தந்தை வண பிதா யூட்நிக்சனும் செயலாளராக எஸ். தேவராஜவும். பொருளாளராக கு கணேசலிங்கமும், 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி ஒன்றியத்தின் ஆரம்பகட்ட நடவடிக்கையாக தீவகத்திலுள்ள ஆலயங்கள் அனைத்தையும் பதிவு செய்து அவற்றுக்கான யாப்புக் கோவை ஒன்றினையும் தயாரிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-75)

## பயிலுநர் ஆசிரியரின் சம்பளம் போதுமானதல்ல

(செம்பியன்பற்று)

பயிலுநர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், அவர்களது மாதாந்த செலவீனங்களை விடமிகவும் குறைவானதாக காணப்படுவதால் பெரும் பொருளாதார கஷ்டங்களைஎதிர்நோக்குவதாக சம்பந்தப்பட்ட ஆசிரியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையேற்ற வீதத்திற்கும், இவர்களுடைய சம்பள உயர்வு வீதத்திற்கும் இடையே மிகுந்த இடைவெளி காணப்படுவதே பயிலுநர் ஆசிரியர்களின் இவ் இடர்ப்பாட்டு நிலைமைக்கு காரணமாக அமைகிறது.

அத்துடன், ஏனைய அரச ஊழியர்களோடு ஒப்பிடுமிடத்து,பயிலுநர் ஆசிரியர்களின் சம்பளம் மிகவும் குறைவானதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-42)

# அறிவிப்புக்கு முரணான வகையில் நிவாரண மீளாய்வு படிவங்கள்

## விரக்தியின் விளிம்பில் தென்மராட்சி மக்கள்

தென்மராட்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் தங்கி இருக்கும் பொதுமக்களுக்கும் நிவாரண மீளாய்வு படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் பெறுபவர்களின் நிவாரணங்கள் மீளாய்வு செய்யப்படமாட்டாதென மாவட்ட அரச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதையும் மீறி இப்படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதனால்,

இவற்றில் கையொப்பங்களையும் சிபார்சுகளையும் பெறும் பொருட்டு தமது கிராம சேவகர்களை நாடி பொதுமக்கள் அங்குமிங்கும் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

இது குறித்து மேற்படி இடம்பெயர்ந்த மக்களுக்கு மீளாய்வு படிவங்களை வழங்கிவரும் கிராம அலுவலர்களிடம் விளக்கம் கேட்டால் தமது மேலதிகாரிகளின் பணிப்பின் பிரகாரமே தாம் இவ்வாறு நடந்துகொள்வதாகவும் மேலதிக விளக்கம் தேவையாயின் மேலதிகாரிகளை அணுகுமாறு கூறிவருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம் நிவாரண மீளாய்வுப் பணியை உடன் நிகழ்த்த வேண்டுமென அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் குரல் எழுப்பி வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## முன்பள்ளி ஆரம்பம்

(கல்வயல்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் இம் மாதம் 15 ஆம் திகதி நீர்வேலி பாடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன்கூடிய நவீனமுன்பள்ளி ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (உ-111

# தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் வாஜ்பாய் கண்டனம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அலுவலகத்தை தாக்க இருக்கும் லக்சறி தொப்பா தீவிரவாத இயக்கத்திற்கு பாகிஸ்தான் உதவுவதை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கண்டித்துள்ளார்.

பாகிஸ்தான் இந்த இயக்கத்துக்கு ஆதரவு கொடுப்பதுடன் வேண்டிய பயிற்சிகளுக்கும் உதவுவதாகவும்,

நாடு ஒற்றுமையாக இருப்பதால் தனது அலுவலகத்தை தாக்க முடியாதென்றும் இப்படியொரு தாக்குதல் நடத்துவதை எமது மக்கள் அனுமதிக்க மாட்டார்களென்றும் வாஜ்பாய் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

கேரளத்தில் ஓய்வெடுத்து வரும் பிரதமர் வாஜ்பாய் செய்தியாளர்களிடம் பேசுகையில் பாகிஸ் தானுடன் இந்தியா நட்புறவை விரும்புகின்றதென்றும் அதேவேளை பயங்கரவாதிகளுக்கு அனுசரணை வழங்கிவருவதை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (து)

# நூற்றாண்டு கொண்டாடும் அவுஸ்திரேலிய அரசு

[கன்பரா]

அவுஸ்திரேலியா இந்தப் புத்தாண்டை தனது நூறாவது ஆண்டாகக் கொண்டாடுகிறது

அவுஸ்திரேலிய நாடு உதயமாகி நூறு ஆண்டுகள் பூர்த்தியானதை அடுத்து இதனைப் பெருவிழா ஆண்டாக அரசு கொண்டாடி வருகிறது.

அரச ஏற்பாட்டில் பிரதமர் ஜோன் கவுன் தலைமையில் ஆறு மாநில கவணர்கள் இணைந்து இதனை கொண்டாடி வருகிறார்கள்.

நகர்களில் ஆயிரக்கணக்கான ஊர்திகள் காட்சி இடம் பெற்றதுடன் பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டிலுள்ள பல பாக மக்களும் கலந்து கொள்ளுமளவிற்கு ஏற்பாடுகள் இடம் பெற்றிருக்கின்றன.

பாரிய அளவில் வான விளையாட்டுகளும் மற்றும் வர்ண மின்சார விளக்கு அலங்காரங்களும் இடம்பெறுகின்றன. (து)

# பிலிப்பைன்சில் அமைதி காக்க அதிபர் எஸ்ராடா அழைப்புவிடுக்கிறார்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் அமைதியைக்காக்க வேண்டும் என்று அதிபர் எஸ்ராடா மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆங்காங்கே தொடர்ந்து இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்தே அதிபர் எஸ்ராடா தொலைக் காட்சியில் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

இந்தக் குண்டுத்தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமான செயலென்றும்கண்டித்துள்ளார்.

ஐந்து பேரைப் பலிவாங்கியதுடன் எண்பது பேரைப் படுகாயத்துக்குள்ளாக்கிய இந்த குண்டுவெடிப்புக்கள் மணிலாவிலுள்ள பேருந்து நிலையத்திலும் புகையிரத நிலையத்திலும் வியாபாரநிலையத்திலும் இடம்பெற்றதாகவும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அதிபர் எஸ்ராடா கேட்டுக் கொண்டார்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை தேடும்பணியில் பொலிஸார் புலனாய்வுத்துறையினரின் உதவியுடன் முனைப்புடன் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-து)

# பொருளாதார வளர்ச்சி 10சதவீதத்தால்அதிகரிப்பு

## சிங்கப்பூர் பிரதமர் தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் பொருளாதாரத்தில் இவ்வாண்டு பத்து வீதத்தால் கூடியுள்ளது என்று பிரதமர் சோ சோ தொங் தெரிவித்தார்.

புத்தாண்டையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் விமானத்துறையைத்தவிர மற்றும் எல்லாத் துறைகளில் முன்னேறியிருந்துள்ளதாகத் தெரிவித்தார்.

துரித தொழில் வளர்ச்சியில் முன்னேறுபவர்களுக்கு பக்கபலமாக அரசும்வசதிகள் உதவ வேண்டும் என்றும் சிங்கப்பூர் பிரதமர் தெரிவித்தார்.

மேலும் குறிப்பிடுகையில் அயல் நாடுகளுக்கு உதவுவதுடன் தூர தேசத்து நாடுகளுடன் தொடர்புகளையும் வளர்க்கிறது என்றும் தெரிவித்தார். (து)

# உலக தரிசனம்

# மூன்று ஆண்டுகளின் பின்னர் பெற்றோருடன் இணைந்த மழலைச் செல்வங்கள்

## கிறிஸ்மஸ் தினத்தன்று சம்பவம்

(இலண்டன்)

மூன்றாண்டுகள் தத்தம் பெற்றோரை பிரிந்திருந்த மூன்று வயதுக் குழந்தைகள் மீண்டும் அவர்களுடன் இணைந்து கொண்ட உள்ளத்தை நெகிழச் செய்யும் சம்பவம் கிறிஸ்மஸ் தினத்தன்று சிசிலித்தீவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது; மூன்று வருடங்களிற்குமுன் கர்ப்பிணிகள் இருவர் மருத்துவமனை ஒன்றில் அருகருகான கட்டில்களில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்

பதினைந்து நிமிட இடைவெளியில் இரு பெண்களும் பிள்ளைகளைப் பெற்றனர்.

பிள்ளைகள் பிறந்த பொழுது இருவருக்கும்அடையாளங்கள் கட்டுவதற்கு தாதிமார் தவறிவிட்டனர்.

குழந்தைகளை தாய்மாரிடம் ஒப்படைத்த பொழுது குழந்தைகளுக்கு அணிவித்த சட்டை மாறிய படியால் குழந்தையைபொறுப்பெடுக்க தாய் ஒருத்தி தவறியதையடுத்து மற்றைய தாயாரும் குழந்தையை ஏற்க வில்லையாம்.

மாற்றப்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட மருத்துவமனையிலேயே வளர்ந்தன.

இதேவேளையில் குழந்தைகள், தாய்மார் ஆகியோரின் இரத்தப் பரிசோதனை, மரபணுப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட குழந்தைகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டதையடுத்து குழந்தைகள் தத்தம் பெற்றோரிடம் சேர்ந்துகொண்டனர்.

மேற்படி பரிசோதனை முடிவுகள் வெளிவர மூன்றாண்டுகள் சென்றதா எனப் பலரும் பேசிக் கொள்கின்றனராம். (க-து)

# பெற்றோலிய விலை குறைப்பில் சிங்கப்பூர் கம்பனிகள்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் பெற்றோலிய எண்ணெய் வகைகளின் விலை குறைக்கப்பட்டு வருகின்றன.

எண்ணெய் உற்பத்தி நாடுகளில் திடீரென ஏற்பட்ட எண்ணெய் விலைக் குறைப்பையடுத்து உலக நாடுகளிலும் எண்ணெய் விலைகள் சரியத் தொடங்கியுள்ளன.

சிங்கப்பூரிலுள்ள எண்ணெய் கொம்பனிகள் படிப்படியாக விலையைக் குறைக்கத் தொடங்கி உள்ளன. ஏற்கனவே மொபில்காஸ் எண்ணெய் கொம்பனிகள் விலையை குறைத்ததையடுத்து கல்ரெக்ஸ் விலையை நேற்று முதல் குறைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இப்பொழுது சிங்கப்பூரில் 30 விழுக்காட்டால் எண்ணெய் விலைகள் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# உலகதரிசன அறிவுப் போட்டி இல. 05

## பாராட்டுப் பெறுவோர்

(நேற்றைய தொடர்ச்சி)

★ செல்வநாயகம் அருட்குமரன் 1ம் வருடம் நுண்கலைப் பீடம் யா/பல்கலைக்கழகம்.
★ நாராயணன் வசந்தமொழி பிள்ளையார் கோயிலடி, வடலியடைப்பு
★ செ. வினாயகமூர்த்தி 86, கச்சாய் றோட், சாவகச்சேரி
★ செ. ஜெ. ஏ: நிம்றோ பிரதான வீதி, வட்டுக் கோட்டை.
★ பிரான்ஸிஸ் ஜெயமலர் கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
★ குலசேகரம் பகீரதன் கலாசாலை வீதி, திருநெல்வேலி
★ இரஞ்சிதமலர் செல்வநாயகம் பலாலி வீதி, திருநெல்வேலி.
★ லாவண்யா ஜெயபாலன் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
★ வடிவேலு சுப்பிரமணியம் ஒடக்கரை சனசமூக நிலையம் பருத்தித்துறை.
★ விசுவலிங்கம் செல்வநாயகம்சிறுப்பிட்டிதெற்கு, நீர்வேலி.

# லேசர்ஒளியில் சீனாவில் புத்தாண்டு

(பீஜிங்)

சீனா புத்தாண்டை லேசர் கதிர் ஒளியைப் பாய்ச்சிக் கொண்டாடியது.

இதேவேளை, அங்கு உள்ள பெரும் சுவரில் ஐந்நூறு சோடிகளுக்கு திருமணங்கள் ஒரே நேரத்தில் செய்து வைக்கப்பட்டன. (து)

# ஸ்திரத்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் இன ஒற்றுமை அவசியம்

## மலேசிய பிரதமர் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

அரசின் ஸ்திரத் தன்மையை கட்டிக்காக்கவும் பொருளாதார வளர்ச்சிக்கும் இன ஒற்றுமை மிக அவசியமென்று மலேசியப் பிரதமர் ஹூசைன் முகமது தெரிவித்தார்.

புத்தாண்டையொட்டி நாட்டு மக்களுக்கு அவர் விடுத்த செய்தியில், இனப் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் எந்தக் காரியங்களையும் மக்கள் செய்யக் கூடாதென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை மலேசியாவை ஒற்றுமையாக வளம் படுத்தப் புதிய கொள்கைகள் தேவையில்லையென்றும் பல இன மக்களுக்கும் சமச்சீர் வாழ்க்கை கிடைக்குமாயின் எந்த வித பிரச்சினைக்கும் மலேசியாவில் இடமில்லையென்றும் தெரிவித்துள்ளார். (து)

# உலகின் முதலாவது குற்றவியல் நீதிமன்றம் அமைப்பு உடன்படிக்கை கைச்சாத்தாகும்

## அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

உலகில் முதலாவது குற்றவியல் நீதிமன்றம் அமைப்புக்கான உடன்படிக்கைகளில் அமெரிக்கா கைச்சாத்திடும் என்று அதிபர்பில்கிளிங்டன்வலியுறுத்தியிருக்கிறார்.

அது பற்றி கிளிங்டன் மேலும்தெரிவிக்கையில், அந்த நீதிமன்றம் எப்படி அமைய வேண்டும் எவ்வெவ் அம்சங்கள் அதில் பிரதானமாக இருக்க வேண்டும் என்பவற்றை வலியுறுத்தவே அந்த உடன் படிக்கையில்கைச்சாத்திட இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அமெரிக்க நாடாளுமன்றம் இந்த அமைய இருக்கும் நீதிமன்றம் பற்றி விவாதித்து ஒப்பமிடலாய் என்று தீர்மானித்தாலே நான் ஒப்பமிடுவேன் என்று கூறினார்.

அமைய இருக்கும் குற்றவியல் நீதிமன்ற அமைப்பு உடன் படிக்கையில் இது வரை நூற்றுமுப்பது நாடுகள் கைச்சாத்திட்டன வென்றும் தெரிவித்த அவர் இது பெரும்பாலும் நெதர்லாந்தில் அமைவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன வென்றும் தெரிவித்தார்.

தனி மனிதனின்உரிமைகள் மீறல் குற்றங்கள் ஒருஅமைப்பில் மனித உரிமைகள் மீறல் குற்றங்கள் ஒரு இனத்துக்கு இன்னொரு இனம்மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் விசாரிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# புதிய மண்டபங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமான நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், புதிதாக அமைக்கப்படும் மணி மண்டபம் மற்றும் தியான மண்டபம் ஆகியவற்றின் அமைப்பு வேலைகள் முடிவடையும் தறுவாயிலுள்ளன. [உ-111]

# முன்பள்ளியில் கலை விழா

(மல்லாகம்)

உரும்பிராய் வடக்கு நவசக்தி முன்பள்ளி பாலர் பாடசாலையின் கலை விழா, கடந்த வெள்ளியன்று பெ. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில், பிரதம விருந்தினராக சர்வோதய செயற்றிட்ட இயக்குநர் எஸ். வி சங்கரப்பிள்ளை கலந்து கொண்டார். (உ-ட-14)

# சந்தையில் இட நெருக்கடி

(கல்வயல்)

மருதனாமடம் சந்தையில் பெரும் இடநெருக்கடி நிலவுகிறது.

இதனால் அங்கு பொருட்களை விற்பனை செய்வோரும், வாங்கச் செல்வோரும் பெரும் சிரமமுறுகின்றனர். (உ-111)

புறந் தூய்மை நீரான் அமை
யும் அகந் தூய்மை
வாய்மையால் காணப்படும்
— குறள் —

# வலம்புரி

## அன்றும் பொய் இன்றும் பொய்

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த மாதம் 24ந் திகதி முதல் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். இதனால் அவர்கள் மீது சர்வதேசம் கொண்டுள்ள மதிப்பு ஒருபடி மேலும் உயர்ந்துள்ளது என்பதை யாரும மறந்து விட முடியாது.

இது இலங்கை அரசாங்கத்திற்குப் பெரும் கசப்பையே அளித்துள்ளது. ஆள் மாறி ஆள் வெளி நாடுகளுக்குச் சென்று விடுலைப்புலிகளே யுத்தத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள், அவர்கள் யுத்தப்பிரியர்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்த அரசாங்கத்திற்கு புலிகளினால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதுடன் - சர்வதேசத்தில் இலங்கை அரசின் சாயத்தையும் கழற்றிவிட்டது. இது காரணமாக குழம்பிப் போயுள்ள அரசு எப்படியாவது புலிகளின் யுத்த நிறுத்தத்தை குழப்பிவிட வேண்டுமென்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்காக இப்போது அரசாங்கம் அடிக்கடி விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதில் படையினர் பலியானார்கள் - காயமடைந்தார்கள் என்றெல்லாம் தகவல் வெளியிட்டுக்கொண்டிருக்கிறது. புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் போது தாக்குதல் நடத்துவதாகக் கூறும் அரசு, முன்னர் புலிகள் உண்மையாக தாக்குதல் நடத்திய போது அதனை மறைத்து தாக்குதல் நடைபெறவில்லையெனவும், ஏகப்பட்ட படையினர் கொல்லப்பட்டும், காயமடைந்த, போதும் ஒரு சிலரே பலியானதாகவும் கணக்குக்காட்டியது.

அன்று புலிகளின் தாக்குதலை - படையினரின் மரணத்தை மறைத்துக் காட்டிய அரசாங்கம் இன்று புலிகள் தாக்குதல் நடத்தாமல் இருக்க தாக்குதல் நடத்தியதாகவும், படையினர் இறந்ததாகவும் பொய் கூறி வருகிறது அன்று தமக்குச் சாதகமெனக் கருதி புலிகளின் தாக்குதலை மறைத்து பொய் கூறிய அதே அரசு இன்று தாக்குதல் நடத்தாமல் இருக்கும் போது தாக்குதல் நடத்தியதாகப் பொய் கூறுகிறது.

# இலங்கையில் வேகமாகப் பரவும் டெங்குக் காய்ச்சல்

# சாவின் விளிம்பிற்கு மனிதனை அழைக்குமா?

## தடுப்பு நடவடிக்கையில் மருத்துவ இயக்கம் முனைப்பு

### மருத்துவ விளக்கம்

போர் அனர்த்தங்கள் துன்ப துயரங்கள் மனித வாழ்வை நிழல்போல் தொடரும் இவ்வேளையில், மனிதகுலத்தை வேரோடு ஒழிப்பதில் குறிப்பாக இலங்கை மக்களின் குரல் வளையை நெரிக்கும் ஒரு நோயாக டெங்குக் காய்ச்சல் பரவி வருவது வேதனைக்குரிய ஒன்று என்றால் மிகையில்லை டெங்கு காய்ச்சல் ஒரு வைரஸ் கிருமியினால் ஏற்படுகிறது

இவ்வைரஸ் மனிதனிலிருந்து மனிதனுக்கு நுளம்பினால் கடத்தப்படுகிறது 'ஈடிஸ்' இனத்தைச் சார்ந்த நுளம்புகளே இவ் வைரஸைக் கடத்துகின்றன. இந்நுளம்பு பொதுவாக பகல் வேளைகளில் காலை ஆறு மணி முதல் எட்டு மணி வரையிலும் மாலை நான்கு மணி முதல் ஏழுமணி வரையிலும் மனிதனைக் கடிக்கும்.

டெங்கு வைரசினால் ஏற்படும் தொற்று நிலை இரு வகைப்படும்

★ நோய்க்குரிய குணங்குறிகள் எதுவும் அற்ற தொற்று நிலை

★ குணங்குறிகளுடன் கூடிய தொற்று நிலை

குணங்குறிகளுடன் கூடிய தொற்று நிலையானது மேலும் நான்கு வகைப்படும்

★ வகைப்படுத்தப்படாத சாதாரண காய்ச்சல்

இங்கு சாதாரண காய்ச்சல் மட்டும் காணப்படும் டெங்கு காய்ச்சலுக்குரிய விசேட குணங்குறிகள் எதுவும் இருக்காது

★ சாதாரண டெங்கு காய்ச்சல்

இதில் காய்ச்சலுடன் (கீழே குறிப்பிட்டுள்ள) டெங்கு காய்ச்சலுக்குரிய குணங்குறிகள் காணப்படலாம்

★ குருதிப்பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல்

இங்கு உடலில் இருந்து குருதிப்பெருக்கு ஏற்படும்.

★ குருதிச் சுற்றோட்ட அதிர்ச்சியுடன் கூடிய டெங்கு காய்ச்சல்

இங்கு குருதி இழப்புக்காரணமாக குருதிச்சுற்றோட்ட அதிர்ச்சி ஏற்படும். இந்நிலையில் மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புக்கள் செயலிழந்து போகலாம் இதனால் மரணம் ஏற்பட இடமுண்டு.

அ) சாதாரண டெங்கு காய்ச்சல்

இதில் பின் வரும் குணங்குறிகள் காணப்படலாம். அதி உயர் காய்ச்சல் சில வேளைகளில் குளிருடன் கூடிய காய்ச்சல் காணப்படலாம் கண்களுக்குப் பின்னேயான வலி; தலையிடி, தசைகளில் வலி ஏற்படுதல்; மூட்டுநோ அல்லது மூட்டு வலி; தோலில் சிறிய பருக்கள் தோன்றும்; இது முதலில் கைகால்களில் தோன்றி பின்னர் உடலின் ஏனைய பகுதிகளுக்குப்பரவும் தோலில் அல்லது சீதமென்சவ்வுள்ள வாய், நாக்கு போன்ற பகுதிகளில் நுண்ணிய ஊதா கலந்த சிவப்பு நிறமுடைய இரத்தப்புள்ளிகள் தோன்றுதல்; இது குறிப்பாக மெல் லண்ணத்தில் காணப்படும். நாரியில் ஏற்படும் வயிற்று வலி குமட்டல், வாந்தி, நிணநீர்க்கணுக்கள் வீக்கம் அடைதல் அல்லது நெறிபாடுதல்

ஆ) இரத்தப்பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சல்

இங்கு மேலே 'அ' வில் கூறப்பட்ட குணங்குறிகளும் காணப்படலாம் அவற்றுடன் பின்வரும் குணங்குறிகளும் காணப்படலாம்.

★ மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்

★ பல்முரசில் இருந்து இரத்தம் வடிதல்

★ இரத்த வாந்தி, இங்கு குருதி சிவப்பு, மண்ணிறம அல்லது கறுப்பு நிறமாகக் காணப்படலாம்.

★ மலத்துடன் குருதிப் பெருக்கு; இதுவும் சிவப்பு அல்லது கறுப்பு நிறமாகக் காணப்படலாம்

★ தோலில் அல்லது தோலுக்குக் கீழேயான குருதிப் பெருக்கு

★ கடுமையானவயிற்று வலி

மேற்கூறப்பட்ட குணங்குறிகள் காணப்பட்டால் உடனடியாக நோயாளியை அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் இது பாரதூரமான பின் விளைவுகளைத் தடுக்கும்.

இ) குருதிச்சுற்றோட்ட அதிர்ச்சி

★ உடல் குளிர்ந்து காணப்படுதல்

★ உடல் வெளிறிக் காணப்படுதல்

★ நோயாளி அமைதியற்று காணப்படுதல்

★ சுவாசவீதம் அதிகரித்தல்

★ நாடித்துடிப்பு அதிகரித்தல், பலவீனமடைதல்

டெங்குக் காய்ச்சல் என்று சந்தேகப்படுமிடத்து

★ காய்ச்சல் வந்த நோயாளி படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டும்

★ காய்ச்சல் வந்த பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்தல் நன்று.

★ தண்ணீர், பழப்பானங்கள் போன்றவற்றைத் தாராளமாகக் குடிக்கக் கொடுத்தல் வேண்டும பால், முட்டை போன்ற உணவுகளையும் கொடுக்கலாம்

★ அஸ்பிரின், புரூபன், இன்டோசிட் போன்ற மருந்து வகைகளை நோயாளிக்குக் கொடுத்தல் கூடாது.

★ பனடோல் உரிய அளவில் கொடுக்கப்படலாம்.

★ ஒருவருக்கு இரண்டாந் தடவையாக இந்நோய் வருமிடத்து மிகுந்த அவதானமாக இருத்தல் அவசியம்.

★ சில வேளைகளில் முதல் தடவை டெங்கு வைரஸ் தொற்று குணங் குறிகள் அற்று ஏற்பட்டிருக்கலாம். எனவே இது நோயாளருக்குத் தெரிந்திருக்காது பின்னர் இரண்டாம் தடவை ஏற்படும் தொற்றின் போது பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம் ஒருவர் பல தடவைகள் இந்நோயால் பாதிக்கப்படலாம்.

★ எனவே பின்விளைவுகளைத் தடுப்பதற்கு உடனடிச் சிகிச்சை எடுத்தல் அவசியமாகும்.

#### நோயின் போக்குத் தன்மையும்

பொதுவாக டெங்குக் காய்ச்சல் 3 படி நிலைகளுக்கூடாக ஒரு நோயாளியில் விருத்தம் அடையலாம்.

முதலாம் நிலை-

**காய்ச்சலுடன்கூடியநிலை**

3-7 நாட்கள் நீடிக்கும்

இரண்டாம் நிலை-

**காய்ச்சல் அற்றநிலை**

ஆனால் இதுஒரு அந்தரமான ஆபத்தான காலப்பகுதியாகும். இந்நிலையைத் தொடர்ந்து குருதிப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. (2-3 நாட்கள்)

மூன்றாம் நிலை-

**குணமடையும் காலப்பகுதி**

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒரு நோயாளி முதலாம் நிலையிலிருந்து 2 ஆம் நிலையை அடையலாம், முதலாம் நிலையில் அல்லது 2 ஆம் நிலையில் உரிய சிகிச்சை கொடுக்கப்படுமிடத்து நோயாளி 3 ஆம் நிலையை அடைவார். அதாவது நோய் குணமாகும்.

முதலாம் நிலையில் உரிய சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து நோயாளி 2 ஆம் நிலையை அடைவார். இந் நிலையில உரிய சிகிச்சை கொடுக்கப்படாதவிடத்து குருதிப்பெருக்கின் நிமித்தம மரணம் சம்பவிக்கலாம்.

#### தடுப்பதில் பிரச்சினைகள்

அ) ஏனைய வைரஸ் நோய்கள் போன்று இதற்கு தடுப்பூசி இல்லை.

ஆ) ஒரு தடவை நோய் ஏற்பட்டதன் பின்பு ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தி இதற்கு முழுமையாக ஏற்படுவதில்லை

இ) இது ஒரு வைரஸ் நோய் என்பதால் இந்நோய்க்கென குறிப்பான மருந்துகள் எதுவும் இல்லை.

(தொடரும்)

**சிவாஜினி கதிர்வேலாயுதபிள்ளை**
(மருத்துவ பீடம் 4-ம் வருடம்)
யாழ். பல்கலைக்கழகம்)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 157914 ஏ | 157914 பி |
| 169035 ஏ | 169035 பி |
| 169035 சி | 169035 டி |
| 170215 ஏ | 170215 பி |
| 170215 சி | 170215 டி |
| 173009 ஏ | 174714 ஏ |
| 174714 பி | 174972 ஏ |
| 174972 பி | 174972 சி |
| 174972 டி | 175068 ஏ |
| 175068 பி | 175068 சி |
| 175068 டி | 175177 ஏ |
| 175210 சி | 175210 பி |
| 175847 ஏ | 175210 டி |
| 175847 ஏ | 175849 பி |
| 176585 ஏ | 175849 பி |
| 177013 ஏ | 176621 ஏ |
| 175210 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 167578 ஏ | 167578 பி |
| 167578 சி | 167578 டி |
| 174076 ஏ | 174045 ஏ |
| 174045 பி | 174045 சி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 170917 ஏ | 171271 ஏ |
| 171617 ஏ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 171581 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 157427 ஏ | 162602 ஏ |
| 162602 பி | 162602 சி |
| 162603 ஏ | 162603 பி |
| 162603 சி | 163729 ஏ |
| 163729 பி | 163729 சி |
| 163729 டி | 163729 ஈ |
| 163846 ஏ | 163846 பி |
| 168434 ஏ | 166938 ஏ |
| 166938 பி | 168197 ஏ |
| 168197 பி | 168198 ஏ |
| 168198 பி | 168427 ஏ |
| 170483 ஏ | 170483 பி |
| 170546 ஏ | 170546 பி |
| 170546 சி | 170546 டி |
| 170571 ஏ | 170571 பி |
| 170575 ஏ | 170576 ஏ |
| 170576 பி | 170576 சி |
| 171276 ஏ | 173204 ஏ |
| 173255 ஏ | 173406 ஏ |
| 173406 பி | 173406 சி |
| 174113 ஏ | 174113 பி |
| 174113 சி | 174113 டி |
| 177018 ஏ | 177018 பி |
| 177019 ஏ | 177019 பி |
| 177019 சி | 1770 9 டி |
| 177024 ஏ | 177024 பி |
| 177024 சி | 177039 ஏ |
| 177039 பி | 177073 ஏ |
| 177086 ஏ | 177095 ஏ |
| 177094 பி | 177094 ஏ |
| 177095 பி | 177316 ஏ |
| 177319 ஏ | 177319 பி |
| 150809 ஏ | 150809 பி |
| 150809 சி | 168213 ஏ |
| 168213 பி | 1682 3 சி |
| 168213 டி | 168250 ஏ |
| 168250 பி | 168250 சி |
| 168250 டி | 168341 ஏ |
| 168341 பி | 168341 சி |
| 168357 ஏ | 168357 பி |
| 168390 ஏ | 168390 பி |
| 168403 ஏ | 168403 பி |
| 168405 ஏ | 168437 ஏ |
| 168437 பி | 172668 ஏ |
| 172699 ஏ | 172700 ஏ |
| 173213 ஏ | 173240 ஏ |
| 173240 பி | 173271 ஏ |
| 173272 ஏ | 173280 ஏ |
| 173323 ஏ | 173323 பி |
| 173325 ஏ | 173325 பி |

(தொடரும்)

## உருவச்சிலை நிறுவுதல்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீமன் நாராயண அவதாரமாகிய ஸ்ரீ நம்மாழ்வாரின் உருவச்சிலை நிறுவுதல் உற்சவம், வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 00 மணியளவில் இடம் பெறவுள்ளது [உ]

## செல்வா ச.ச. நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யா/செல்வா சனசமூக நிலையமும் சந்தை வித்தகர் கூடமும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி சனசமூக நிலையத்தினை யாழ் மாநகராட்சி மன்றஉறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் திறந்துவைக்க, சந்தை வித்தகர் கூடத்தினை தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் ஆசைப்பிள்ளை தெய்வேந்திரம் திறந்து வைத்தார். (உ)

# மிருசுவில் வடக்கில் 4 சைக்கிள் மீட்பு

மிருசுவில்வடக்குப்பகுதியில் மறைத்துவைத்திருந்த நான்கு துவிச்சக்காவண்டிகள் மீட்கப் பட்டுள்ளதாக யாழ்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலிகுணசேகரா தெரிவித் துள்ளார் மீட்கப்பட்டதுவிச் சக்கரவண்டிகள் சம்மந்த மாக அவர்மேலும்தெரிவிக் கையில் [மிருசுவில்பகுதியில் புதைகுழியில் இருந்துசடல மாக மீட்கப்பட்டவர்கள் கொண்டுவந்த துவிச்சக்கர வண்டிகளாக இவைஇருக்க லாம்என்று தாம்நம்புவதாக வும் இதுதொடர்பானவிசா ரணைகள் தற்போதுமேற் கொள்ளப்பட்டு வருவ தா கவும் அவர்தெரிவித்துள் ளார். (வ)

# நிவாரணம் வழங்குவதில் தாமதம் மரவள்ளிக்கிழங்கு உண்டோர் வாந்தி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத் தில் நிவாரணப்பொருட்கள் வழங்குவதில் ஏற்பட்ட கால த்ாமதம் காரணமாக பாதிக் கப்பட்ட மக்கள் மரவள்ளிக் கிழங்கைச் சாப்பிட்டதினால் வாந்திபேதிக்குள்ளாகி இருப் பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இராணுவக் கட்டுப்பா டற்ற வாகரை பிரதேச செயலர் பிரிவில் கதிரவெளி, ஆலங்குளம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக் களே இத்தகைய நோய்க்கு ஆளாகி இருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

கதிரவெளி, ஆலங்குளம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ள இருநூறு குடும்பங்களே வாந்திபேதி நோய்க்குள்ளாகி உள்ளனர். (வ)

# அரசு படையினருடன் சேர்ந்து தமிழ்மக்களைகொன்று குவிக்கிறது!

## வை.கோபாலசாமி ஆவேசம்



(சென்னை)

தமிழீழத்தில் சிங்கள இரா ணுவம் தமிழர்களைக் கொன்று குவிக்கும் வகையில் படைநடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. அரசாங் சமும் அதனை ஆதரிக்கும் வகையில் போரை அதிகமாக தீவிரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது: இது தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அரசாங் கம் மதிக்காது செயற்படும் அடாவடித்தனமான நடவ டிக்கையாகும். இவ்வாறு தமிழ்நாடு மறுமலர்ச்சி திரா விட முன்னேற்ற கழகத்தின் செயலர் வை. கோபாலசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கைஅரசாங்கம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க முன் வராது இராணுவத்துடன் இணைந்து தமிழர்களை அழிக்கும் முயற்சியில்போரை தீவிரப்படுத்த முனைகிறது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளோ சமாதானத்தை விரும்பி ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித் துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை அர சாங்கம் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டு சமாதானத்தை தோற்றுவிக்க சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டு மென்றும் தனது ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்து கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (இ-5)

# சமாதான முன்னணி ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் சுவரொட்டி

(கொழும்பு)

அறுபது அமைப்புகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் சமாதான முன்னணி நாடளாவிய 'ரீதியில் அர சாங்கமும் தமிழீழ விடுத லைப் புலிகளும் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்பதை வலியு றுத்தி ''சுவரொட்டி இயக் கம்'' ஒன்றை நடத்தவுள் ளது.

''2001ம் வருடம் சமா தானத்துக்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்'' என்ற வாசகங் களைக் கொண்டுள்ள சுவ ரொட்டிகளை நாடு பூராக வும் ஒட்டவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

நோர்வே மேற்கொண் டுள்ள சமாதான முயற்சியில் காணப்படும் இழுபறி, முட் டுக்கட்டைகளை நீக்கி, அர சையும் புலிகளையும் பேச்சு வார்த்தை மேடைக்குக் கொண்டுவர உள்ளூர் அழுத் தங்களைப் பிரயோகிக்கும் திட்டங்களை மக்கள் சமா தானமுன்னணிமேற்கொள்ள வுள்ளதாகவும், இந்த முயற் சிக்கு இறுதி வடிவம்கொடுக்க நாளை அவசர கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத் தில் நோர்வே அரசு ஈடுபடு வதற்கு முன்னரே முன்னணி யின் சர்வமதக் குழு வன்னி சென்று விடுதலைப் புலிக ளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்தமையும் இங்கு குறிப் பிடத்தக்கதாகும். (இ)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயிசேவா நிலை யத்தின் நடப்பாண்டுக் கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக உ. கந்தசாமி செயலாளராக.த. சுப்பிரம ணியம் பெருளாளராக ந. திரிலோகநாதன், சேவை இணைப்பாளராக க. கணேச லிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

## மூவர் கைது

அண்மையில் மன்னார் தாழ்வுப் பாதையென்ற இடத்தில் கடற்படையினர் 3 பொதுமக்களை கைக் குண்டு, சயனைற்வில்லை, வெடிக்கவைக்கும் கருவி ஆகியன சகிதம் கைதுசெய் துள்ளனர்.

இவர்கள் மன்னார்ப் பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளனர். (உ-04)

**யுத்தத்தை...**

முக்கியமான பலவிடயங் களுக்குத்தீர்வுகாணலாம்.

இதற்கு வசதியாகமுதலில் விடுதலைப்புலிகள் தமதுஉண் மையான நிலையை வெளிப் படுத்த வேண்டும் எனவும் அவர்தெரிவித்தார். (ந-4)

**தமிழீழப்...-**

இழப்பையும், வேதனையை யும் நீண்ட காலமாக அனு பவித்து வந்துள்ளது. ஆனால் இன்று விடுதலையின்வாசலில் நிற்கின்றது. வருங்காலத்தை எமக்கான விடுதலையின்கால மாக மகிழ்ச்சியுடனும் நம்பிக் கையுடனும் எதிர்கொள் வோம் என்றும்,

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் அனைவருக் கும் தமிழீழ விடுதலைப் புலி களின் இதயம் கனிந்த புத் தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ-5)

**நோர்வேத்.**

யின் சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இலங் கைக்கு வரவுள்ள செய்தியும் ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட் டது. [இ]

**பயங்கரவாதம்..**

எமக்கு உற்சாகம் அளிப்ப தாகவும் உள்ளது.

கடந்த நான்கு மாதமாக இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட பத்து இரா ணுவ நடவடிக்கைகளும் பூரண வெற்றியை அளித் துள்ளது. இதேவேளை விடுதலைப் புலிகளி னால் மேற்கொள்ளப்பட்ட ஆறு தாக்குதல் நடவடிக்கை களையும் இராணுவம் முறி யடித்துள்ளது. இவை இரா ணுவத்தின் பாரிய வெற்றி களாகும்.

பயங்கரவாதத்தை ஒழிக்க படையினர் திடசங்கற்பம் பூணவேண்டும் என்றும்தனது செய்தியில் மேஜர் ஜெனரல் பி பல்லேகல குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை புதிய ஆண் டில் யுத்தத்தைத் தொடரும் அரசின் நிலையில் எதுவித மான மாற்றமுமில்லை. பயங் கரவாதத்திற்கெதிரான யுத் தம் பயங்கரவாதம் ஒழிக்கப் படும்வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். இவ் வாறு அலரிமாளிகையில் நேற்று இடம் பெற்ற புத் தாண்டு நிகழ்ச்சி ஒன்றின் போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித் துள்ளமையும் இங்கு குறிப் பிடத்தக்கது. (வ)

**மகேஸ்வரன்--**

தேசசபைத்தலைவர் ஐயாத் துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மற் றும் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் அலெக்சாண்டர் சார்ள்ஸ் ஆகியோர் பொன்னுத்துரை மகேஸ்வரனை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அங்கு மகேஸ்வரனின் வாக்குமூலம் நீதிவான் முன்னிலையில் மாலை 6 மணிவரை பதியப் பட்டது.

மகேஸ்வரனது வாக்குமூலம் மீண்டும்இன்று காலை பதியப் படுமென நீதிமன்ற வட்டா ரங்கள் தெரிவித்துள்ள அதே வேளை மகேஸ்வரன்மீண்டும் ஈ.பி.டி.பி. அமைப்பினரின் பாதுகாப்பில் விடப்பட்டார். (வ-23)

**மிருசுவில்--**

றற்ற நீதவான் சுப்பிரமணி யம் கந்தசாமி முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது. (வ-23)

**அதிவேகம்...**

ஓடும் மகாவலி ஆற்றில் கடற் புலிகளால் வெள்ளோட்டம் விடப்பட்டதாகவும் இரா ணுவ ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ந)

**ரணில்..**

களுக்கு அவர்களது அபிலா ஷைகளைத் தீர்த்து வைக்கும் வகையிலான தீர்வை வழங்க வேண்டும் என்றும், இந்தியா வில் உள்ள மாநில சுயாட்சி அதிகாரத்தைப் போல இலங் கையில் தமிழர்களுக்கு வழங் கப்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என் றும் விடுதலைப் புலிகளுட னான யுத்தத்தில் பிரச்சினையைத் தீர்க்க முடி யாதென்றும், அரசியல் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க முடியும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (வ)


## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி சிதம்பரநாதன்

சாவகச்சேரிகோவில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கருவே லடி ஒழுங்கை,கொக்குவில்கிழக்கை தற்காலிக முகவரி யாகக் கொண்டவருமாகிய திருமதி திலகவதி சிதம் பரநாதன் 01/01/2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற இராமநாதன்-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிதம்பரநாதனின் அன்பு மனைவியும், அனுஷா (ஜேர்மனி), அஜந்தன் (ஜேர் மனி), அர்ச்சுனன் (ஜேர்மனி), கஜந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன் (ஜேர் மனி), சுமித்திரா (ஜேர்மனி), சுஜாத்தா (ஜேர்மனி) லக்ஷ்மி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலுசன் (ஜேர்மனி), கிரன் (ஜேர்மனி), நிரோஜ் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். மீனாம்பிகை, சிவகுமார், ஸ்ரீமதி, ஆகியோரின் அன் புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(02/01/2001) செவ்வாய்க் கிழமை பகல் 12 மணிக்கு தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரி யைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

த.சிதம்பரநாதன் (கணவர்)

இ மீனாம்பிகை (சகோதரி)

தற்காலிக முகவரி:—
வே. பஞ்சலிங்கம்
கருவேலடி ஒழுங்கை
கொக்குவில்கிழக்கு
கொக்குவில்

(கி/1307



A/L 2003

(கலை வர்த்தகப் பிரிவுகள்)

ஜனவரி - 06

காலை 8 00 மணி

DMI

யாழ் நகர்

தமிழ் : மீரா
IQ : வழமையான ஆசிரியர்
ஆங்கிலம்: ஜெயக்குமார் (1997)



ஸ்ரீசெல்வா (யாழ்ப்பாணம்)

மாதவன் - ஸ்நேகா சார்லி நடித்த

என்னவளே

10-30 மட்டும்

விக்னேஸ், ரவளி நடித்த

நீ எந்தன் வானம்

2-30 மட்டும்

ரசிகர்களுக்கு புதுவருட வாழ்த்துக்கள்

(கி-688)



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு

வலம்புரியின்

**கவிதைப் போட்டி**

(வளர்ந்துவரும் இளம் கவிஞர்களுக்கானது)

விபரங்கள்

நாளைய வலம்புரியில்


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல : 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.